மேலும் இலவச பிரதிநிதிகளுக்கும்,
இலவச பத்திரிக்கை பிரதிநிதிகளுக்கும்,
எங்களை தொடர்பு கொள்ளுங்கள்




இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk

# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

இதழ் 7

- சமாதானத்தையும் பாதுகாப்பையும் எப்படிப் பெற்றுக்கொள்ளலாம்
- நீங்கள் இயேசுவுக்காக எச்சரிக்கையுடன் காத்துக் கொண்டிருக்கிறீர்களா ?
- கொதி கெண்டியைத் துலக்கும் போது
- விவாகரத்து பற்றிய கிறிஸ்தவ போதனை
- பாபிலோன் தேசத்து பெல்ஷாத்சார்
- காணாமற்போன மகன்

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் “கிறிஸ்துவில் சகோதரர்” என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் ‘வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற’ மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேரான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
http// www.choose2live.info/
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

### புது சிருஷ்டி பதிப்பாளர் குழு

**லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்**

ராஜபட்சம் ஆனந்தா : **மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்**

பவித்ரா : **நிர்வாகம், உபப்பதிப்பாளர்**

**திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ் மற்றும் சந்திர மோகன் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.**

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

*“இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின” (2. கொரிந்தியர் 5:17).*



# சமாதானத்தையும் பாதுகாப்பையும் எப்படிப் பெற்றுக்கொள்ளலாம்

## டென்னிஸ் ஜில்லட்

தேவன் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார், வருங்காலத்தில் என்ன செய்து கொண்டிருப்பார் என்பதை அவர் வேதாகமத்தில் விளக்குகின்றார். அதுவே நமக்கு, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மீண்டும் வரும்போது தேவ இராஜ்யத்தில் வர இருக்கின்ற ஒரு சிறந்த வாழ்க்கையைப் பற்றிய நம்பிக்கையை வழங்குகிறது. மேலும் அதுவே தேவ இராஜ்யமானது ஸ்தாபிக்கப்படும்போது அதிலுள்ள ஒரு குடிமகனாக வாழ்வதற்கு கற்றுக்கொள்ளத் துவங்கும்படி இப்பொழுதே தேவசித்தத்திற்குள் வாழும்படி நம்மை அழைக்கின்றது.

### தேவனோடு சமாதானம்

தேவவார்த்தையானது வெளிப்படுத்துவதுபோல ஒருவன் தேவசித்தத்திற்கு தன்னை அர்ப்பணிக்கும் போது, அவன் தேவ இராஜ்யத்தை நம்பிக்கையோடு எதிர்நோக்குகின்ற ஒரு குடிமகனாக மாறிவிட்டான் என்பதை அறிந்து கொள்ளுதல் ஒரு முக்கியமான புரிந்து கொள்ளுதலாகும். இதனைத் தொடர்ந்து விசுவாசிகளின் உண்மையான பணியும் அவர்கள் சென்றடைய வேண்டிய இலக்கும் இவ்வாழ்வில் நிறைவேற்றப் படாமல் மறுவாழ்விலும் தேவ இராஜ்யமாகிய புதிய உலகிலும் தான் நிறைவேற்றப்படும்.

இதன் விளைவால், அநேகர் சாட்சி சொல்லுவதுபோல, தீய சக்திகளோடும் வல்லமைகளோடும் கவர்ச்சிகளோடும் இவ்வாழ்வில் முன்பு இருந்த எந்த ஈடுபடும் முழுமையாய் மாற்றப்பட்டிருக்கிறது. இவ்வுலகில் தேவ இராஜ்யமானது நிலைநாட்டப்பட்டிருக்கும்போது தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசிப்பதோடு இவ்வுலகில் ஒரு புனிதப் பயணியாக - அதாவது இன்னொரு இடத்திற்கு, இன்னும் சிறப்பான ஒன்றிற்கு கடந்து செல்கிறீர்கள் என்பதை நீங்கள் அறிந்து கொள்கிறீர்கள். இவ்வறிவைத் தொடர்ந்து, இவ்வுலக காரியங்களானது உங்களை அடக்கி ஆளாதபடிக்கும், நிரந்தரமற்றதும் நிலைமாறுகிறதுமான உலக பொருட்களின் ஈர்ப்புசக்திகளால் கட்டுண்டு போகாதபடிக்கும் அவைகளை நீங்கள் இலகுவான கைப்பிடிக்குள் வைத்துக் கொள்வீர்கள்.

சிற்றின்பங்களைத் தேடிச் செல்வதை விட, செல்வங்களை சேர்த்துக் குவிப்பதைவிட, உயர்கல்வியை அடைவதை விட, மேலான காரியம் வாழ்வில் இருக்கிறது என்பதை நீங்கள் அறிந்து உணர்ந்து கொள்வீர்கள்.

இவ்வாழ்வைக் குறித்த உண்மையான சத்தியத்தை நீங்கள் அறிந்து கொள்ளுவதைத் தொடர்ந்து அவைகளின் அடிமைத் தனத்திலிருந்து நீங்கள் விடுதலையாக்கப்படுவீர்கள். சத்தியத்தை அறிந்து கொண்டு அதனால் விடுதலை பெறுவதே தேவனோடு சமாதானத்தைக் கண்டடைவதற்கான முதல்முக்கியபடியாக இருக்கிறது.

## வாழ்க்கையைக் குறித்த சரியான வரைபடத்தோற்றம்




சத்தியமானது அனைத்தையும் ஒரு முழுமையான தோற்றத்திற்குள் கொண்டு வருகின்றது. ஆகவே ஒரு மனிதன், தேவனைக் குறித்தும் தேவசித்தத்தைக் குறித்தும் அறிந்து கொண்டதினால் அவன் இதயத்தில் ஒரு பாடலும் அவன் நடையில் எதுகைமோனையுள்ள ஒரு இசைப்பாடலும் இருப்பதைக் கண்டு கொள்கிறான். இந்த அறிவானது, தேவனுடைய வார்த்தையை நாம் படிக்கும்போது நாள்தோறும் பெலப்பட்டு வளர்ச்சியடைவதோடு, தமது கிருபையுள்ள சித்தத்தை வார்த்தையில் வெளிப்படுத்தி இருக்கிறவராகிய எல்லாவற்றிற்கும் ஆதாரமாய் திகழ்கிற தேவனிடத்தில் நம்மை இன்னும் ஆழமாகவும் அதிக நெருக்கமாகவும் கொண்டு வருகின்றது. இவ்வகையில், தீங்கும் நெருக்கமுமான காலங்களிலும் கூட ஒரு நபரால் சமாதானமாய் இருக்க முடியும். அதிகமாய் உபத்திரவப்படுத்தப் பட்டவராக இருந்தும், நிரந்தரமாக நிலைத்திருக்கும் சமாதானத்தைக் கண்டு கொண்டவரால் எழுதப்பட்ட சொற்களை கவனியுங்கள்.

*"அல்லேலூயா, கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் சந்ததி பூமியில் பலத்திருக்கும், செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வாதிக்கப்படும். ஆஸ்தியும் ஐசுவரியமும் அவன் வீட்டிலிருக்கும், அவனுடைய நீதி என்றைக்கும் நிற்கும். செம்மையானவர்களுக்கு இருளிலே வெளிச்சம் உதிக்கும், அவன் இரக்கமும் மன உருக்கமும் நீதியுமுள்ளவன். இரங்கிக் கடன் கொடுத்து, தன் காரியங்களை நியாயமானபடி நடப்பிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் என்றென்றைக்கும் அசைக்கப்படாதிருப்பான். நீதிமான் நித்தியகீர்த்தியுள்ளவன். துர்ச்செய்தியைக் கேட்கிறதினால் பயப்படான்; அவன் இருதயம் கர்த்தரை நம்பி திடனாயிருக்கும்"* (சங்கீதம் 112:1-7).

### உறுதியாய்ப் பற்றிக் கொண்ட ஓர் இருதயம்

இவ்வார்த்தைகளை எழுதிய மனிதனின் குணநலனைச் சிந்தியுங்கள். கர்த்தரை நம்புவதில் அவனுடைய இருதயமானது அசையாதபடி உறுதிப்பட்டிருந்தது. பய உணர்வும் நிச்சயமற்ற தன்மையுமுள்ள நாளில் உறுதியாய் பற்றிக் கொண்டிருக்கும் ஒரு இருதயம் பெற்றிருப்பது அற்புதமான காரியமாகும். அதாவது சமாதானமில்லாத உலகில் சமாதானமாய் இருக்கும் மனிதனைப் போன்றவனை தவறான வழியில் ஒருபோதும் துன்பப் படுத்தமுடியாது. ஏனென்றால் கர்த்தருடைய சித்தமானால் துன்பப்படுத்தப் படுவதற்கும் கூட அவன் எப்போதும் ஆயத்தமாயிருக்கிறான்.

முதலாவது எண்ணத்திலும், தொடரும் சுய உணர்விலும் தேவனை நோக்கியிருக்கும் ஒரு மனிதனாய் இருக்கிறான். தேவ சித்தமே மிகச்சிறந்ததும் மிக உயர்பண்பு மிக்கதுமானது என்ற மேலான கொள்கையின் அடிப்படையில் வாழ்கின்ற தனது வாழ்வில் அவன் தேவனுக்குப் பயப்படுகிற மனிதனாக இருக்கிறான். தீங்கான காலங்களில் தன் குணத்தில் திருப்திப்பட்டுக் கொண்டிராமல், "அசையாத நம்பிக்கைக் கொண்டவனாயிருக்கிறான்." அந்தச் சொல்லைக் கவனியுங்கள் - அவன் இருதயம் 'திடனாயிருக்கும்.'

அசைக்கமுடியாத ஒரு திட நம்பிக்கை அவனுக்கு இருந்தது என்பதை அந்த வார்த்தை அர்த்தப்படுத்துகின்றது. உண்மையைப்போல தோற்றமளிக்கும் புத்திசாலித்தனமான எந்த வாக்குவாதமோ விவேகமான எந்த அபிப்பிராய முடிவோ, தேவனைப் பற்றிய சத்தியத்திலிருந்து அவனைக் கவர்ந்திழுக்க முடியவில்லை. பிறமனிதர்களால் அவன் "பணிய மறுக்கிறவன்" என்று அழைக்கப்படலாம். இன்னும் சிலரால் அவன் "பரந்த மனப்பான்மை இல்லாதவன்" என்று கருதப்படலாம். ஆனால் அற்புதமானவகையில் அவன் பெலமுள்ளவனாயிருந்தான். உறுதியாய்ப் பற்றிக்கொண்ட அவனது இருதயமே அவனது பெலத்திற்கும் அவனது சமாதானத்திற்கும் காரணமான இரகசியமாக இருந்தது.



இப்பொழுது அவனது உறுதியான தன்மைக்கான காரணத்தைக் குறித்துக் கொள்ளுங்கள். சங்கீதக்காரன் கர்த்தரை நம்பிக்கையாக கொண்டிருக்கிறான். இந்நவீன கால உலகிற்கு இது ஒரு பழங்கால சிந்தனையாக இருந்தாலும், இதனை தியானஞ்செய்யும் நீங்கள் நன்றாக இருப்பீர்கள், ஏனென்றால் உங்கள் இன்றைய வாழ்வும் இனிவருகின்ற வாழ்வும் இதற்குள்ளாகத்தான் அமைந்துள்ளது. கர்த்தரை நம்பிக்கொண்டிருப்பதே உங்களது பாதுகாப்புக்கான திறவு கோலாகும். அதுதான், அதைத்தவிர வேறு இல்லை.

## அவரது நாமத்திற்குள் தேவசித்தம்

நமது பாதுகாப்பிற்கு அடிப்படையாக திகழுகின்ற நம்பிக்கையின் முக்கியத்துவத்தைப் போதிக்கும் நீதிமொழிகள் புத்தகத்தில் இன்னொரு தலையாய கொள்கையைக் காணலாம்.

> *"கர்த்தரின் நாமம் பலத்த துருகம், நீதிமான்*
> *அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்"* (நீதிமொழிகள் 18:10)

தேவனுடைய நாமமானது தேவன் எப்படிப் பட்டவராக இருக்கிறார் என்பதை நமக்கு வெளிப்படுத்துகின்றது. இந்த வேதாகம கருப்பொருளானது தனியாக பிரித்தெடுத்து ஆராய்ந்து பார்க்கக்கூடிய தகுதிபெற்றதாகவும் முக்கியமானதுமாக இருக்கிறது. எனினும் நினைவுகூரத்தக்க தேவனுடைய நாமமானது தேவன் உண்மையான தன்மையில் எப்படி இருக்கிறார் என்று வெளிப்படுத்துவதோடு அவரது குணமானது பிறருக்கு ஏற்றவகையில் (பிறருடைய நிலைமைக்கு ஒத்துப்போகும் வகையில்) தம்மை வெளிப்படுத்துகிறதாகவும் இருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்வது தற்சமயத்திற்குப் போதுமானது. வேறு வார்த்தைகளில் கூறினால், எரியும் முட்செடியில் மோசேக்குத் தேவன் இருக்கிறவராகவும் இருக்கப்போகிறவராகவும் தம்மையே வெளிப்படுத்தினார். அவர் தம்மில்தாமே ஜீவிக்கிறவராகவும், பிறர் எவ்விதத் தேவையோடு அவரை நாடுகிறார்களோ, அவர்களுக்கு அவ்விதமானவராக தோன்ற தீர்மானமுள்ளவராகவும் இருக்கிறார் என்று தமது வார்த்தையிலும் இப்பொழுது இயேசுவிலும் உன்னதமாய் வெளிப்படுத்திய உயர்ந்த தேவநோக்கத்தை தேவநாமமானது முழுமையாய் புரிந்து கொள்ள வகை செய்கிறது என்று அவர் அர்த்தங்கொள்கிறார். தேவனுடைய கிருபையுள்ள நோக்கத்தில் ஒருபங்காக மாறிவிட்டதினிமித்தம் நீதிமான்கள் அவருடைய நாமத்திற்குள் ஓடி சுகமாயிருக்கிறார்கள்.

தேவனுடைய நோக்கத்தின் பங்காக மாறும்படி நாம் அழைக்கப்பட்டிருக்கும் போது அதாவது நற்செய்தியை விசுவாசித்து அதற்கு கீழ்ப்படிவதினால் - தேவனுடைய வாக்குத்தத்தத்திற்குள்ளாக பாதுகாப்பை காணும்படி நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். தேவன் தமது வார்த்தையில் நம்மிடம் என்ன சொல்கிறாரோ அதை நாம் புரிந்து கொண்டு விசுவாசிப்போமானால் அது நமது வாழ்வை மாற்றும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் நாம் தேவனோடு சமாதானம் கண்டு கொள்கிறோம். இதுவே, தொல்லையும் ஒழுங்கற்ற இக்காலக்கட்டங்களில் ஒப்பிட முடியாத ஒரு சொத்தாக இருக்கிறது.

தேவன் தமது ஜனங்களுக்குத் தேவையாக இருக்கின்ற அனைத்துமாக மாறிவிடுவார். இதுவே அவருடைய நாமத்திற்குள்ளிருப்பதை முழுமையாய் புரிந்துகொண்ட மேலான தேவநோக்கமாக இருக்கிறது. பலத்த சவுரியவான்களுக்கு முன்பாக வெளிப்பட்டு அவர்களுக்குத் தேவையான அனைத்துமாக மாறிவிடுவதோடு அந்த பலத்த சவுரியவான்களின் மூலமாக மனுக்குலத்திற்கு தேவையான மனுக்குலம் நாடுகின்ற அனைத்துமாக மாறிவிடுவார். அத்தேவநோக்கத்தின் வெளிப்பாடானது பன்மடங்காய் அவருடைய ஒரே பேறான குமாரனில் வெளிப்படுத்தப்பட்டது.

இப்பொழுது நமது இரட்சிப்புக்காகத் தேவைப்படும் ஒவ்வொன்றையும் இயேசுவின் மூலமாய் தேவன் சாதித்துமுடித்து விட்டார். நித்திரை செய்யும் மரித்தோரை எழுப்புவதற்கும் அனைத்து வயதிற்குட்பட்ட விசுவாசிகளையும் அவரோடு தேவ இராஜ்யத்தில் ஊழியஞ்செய்ய பெலப்படுத்துவதற்கும் இயேசு மீண்டும் வரும்போது, இயேசுவும் அவரோடு ஊழியஞ்செய்கிறவர்களும் இப்பூமியை மறுரூபமாக்கி இதனை திரும்பவும் புதுமாதிரியாக்குவார்கள்.

ஆகவே நீதிமொழியை எழுதியவர் 'கர்த்தரின் நாமம் பலத்ததுருகம்' என்று எழுதினார்.

**- டென்னிஸ் ஜில்லட்**



# நீங்கள் இயேசுவுக்காக எச்சரிக்கையுடன் காத்துக் கொண்டிருக்கிறீர்களா ?

கொடூரமான காலநிலை, பயமுறுத்தும் அபாயங்கள், தீவிரமான நோய்கள், அல்லது உடனடியாக நிகழ இருக்கும் இராணுவ நடவடிக்கைகள் போன்ற எச்சரிப்புகளைக் கொடுக்கும்போது எல்லாரும் ஏற்றுக்கொள்வதில்லை. அது வராது என்ற நம்பிக்கையில், வர இருக்கின்ற பெரும் விபத்தைக் குறித்துச் சிந்தியாமல் இருப்பதை சில மக்கள் தெரிந்தெடுத்துக் கொள்வதால் அப்படி இருக்கக்கூடும். ஆனால் டெரிக்பான்யார்டு விவரிப்பது போல அழிவுக்கு ஏதுவாக மக்கள் அலட்சியப் படுத்துகின்ற ஒரு காரியத்திற்காக காத்திருப்பது தகுதியுள்ளதாக இருக்கிறது.

## இயேசு வருகிறார்

இக்காலத்தை முடிவுக்குக் கொண்டு வரும்படிக்கும், தேவ இராஜ்யத்தை நிலை நாட்டும்படிக்கும், எப்போது பூமிக்குத் திரும்பிவருவார் என்று அவரிடம் ஒருமுறை கேட்டபோது, அவருடைய இரண்டாம் வருகையினை முன்னறிவிக்கும் அடையாளங்களாக, ஒரு கோர்வையான பல்வேறு நிகழ்ச்சிகளை இயேசு பட்டியலிட்டார். இவைகளை நீங்கள் லூக்கா 21ஆம் அதிகாரத்தில் படிக்கமுடியும். மேலும் அவைகள் சமீப ஆண்டுகளில் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற யுத்தங்கள், பஞ்சங்கள், பூமி அதிர்ச்சிகள் மற்றும் எல்லா உபத்திரவமான காரியங்களின் வரிசையில் பயமுறுத்தும்படியும் குழப்பக் கூடிய வகையிலும் பெருகிக் கொண்டிருக்கின்றன.

அத்தகைய நிகழ்ச்சிகளால் பாதிக்கப்பட்டவர்கள் உண்மையில் மனக்கவலையையும் அக்கறையையும் அடைவார்கள். ஆனால் இயேசுவுக்காக எச்சரிக்கையுடன் காத்துக்கொண்டிருப்பவர்கள் காரியங்களைச் சற்று வித்தியாசமாக காண்பார்கள். ஏனென்றால் இயேசு சொன்னார் : *"இவைகள் சம்பவிக்கத் தொடங்கும் போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்து பார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்"* (லூக்கா 21:28).

வரும் நிகழ்ச்சிகளில் விசுவாசம் கொண்டவர்கள் இயேசு திரும்பவும் வருவதற்கு ஏன் ஆர்வமுடன் ஆசையாய் இருக்கிறார்கள் என்பதை இக்கட்டுரையில் சுருக்கமாக காண்பிக்க விரும்புகிறோம்.

## அவர் யார் ?



இயேசு தேவனுடைய ஒரே பேறான குமாரன் அவருடைய வல்லமையினால் தேவன் கன்னி பெண்ணான மரியாளுக்கு ஒரு குமாரனைக் கொடுத்தார். (லூக்கா 1:26-35) உறுதிப்படுத்தும் வகையில், அப்படி ஏதாவது தேவைப்படுமானால், ஆசாரியனாகிய சகரியா தேவவல்லமையில் நிறைந்தவராக, ஆபிரகாமுக்குக் கொடுத்த தேவனுடைய வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலாக இயேசு வந்தார் என்று அறிவிக்கிறான்.

*"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. அவர் நம்முடைய பிதாக்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின இரக்கத்தைச் செய்வதற்கும்; தம்முடைய பரிசுத்த*

*உடன்படிக்கையை நினைத்தருளி: உங்கள் சத்துருக்களின் கைகளினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் எனக்கு முன்பாகப் பரிசுத்தத்தோடும் நீதியோடும் எனக்கு ஊழியஞ்செய்யக் கட்டளையிடுவேன் என்று அவர் நம்முடைய பிதாவாகிய ஆபிரகாமுக்கு இட்ட ஆணையை நிறைவேற்றுவதற்கும்; ஆதி முதற்கொண்டிருந்த தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளின் வாக்கினால் தாம் சொன்னபடியே, தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு, நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும், நம்மை ரட்சிக்கும்படிக்கு, தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக் கொம்பை ஏற்படுத்தினார்"* (லூக்கா 1:68-75)

### பாவமில்லாதவர்

இறக்கும் தன்மை உடைய ஒரு தாய்க்கு பிறந்ததால் இயேசுவும் கூட இறக்கும் தன்மை உடையவராக இருந்தார். ஆகவே, *"எல்லா விதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிறார்."* (எபிரெயர் 4:15). அவர் முன்பும் இப்போதும், *"பரிசுத்தரும், குற்ற மற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிறார்"* (எபிரெயர் 7:26). இயேசுவானவர் எப்படி பாடுபட்டார், மரித்தார், அடக்கம் செய்யப்பட்டார், கல்லறையிலிருந்து தேவன் அவரை எப்படி எழுப்பினார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அப்போஸ்தலனாகிய பேதுரு அவரைப்பற்றி இப்படி சொல்லியுள்ளான். *''தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார். அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது'* (அப்போஸ்தலர் 2:24)



இயேசு தமது பிதாவினுடைய சித்தம் எப்பொருள் கொண்டிருந்தாலும், அல்லது உரிமையோடு எதைக் கேட்டிருந்தாலும், முழுமையாகப் பணிந்து கீழ்ப்படிந்தார். அப்போஸ்தலன் பவுல் எழுதியது போல: *"அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும் படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்."* (பிலிப்பியர் 2:8-11)

### தேவன் தேர்ந்தெடுத்த இராஜா

மகிமைக்கு உயர்த்தப்பட்ட நிலையானது, அவரது பரிபூரண கீழ்ப்படிதலின்



நிமித்தமாக, அடிக்கடி மேற்கோளாக காட்டப்படுகிறது. சங்கீதம் 110ல் இயேசு குறிப்பிடப்பட்டுள்ளார், என்பதை அப்போஸ்தலன் பேதுரு உற்றுக்கவனித்து இனங் கண்டுகொண்டு, அந்த பழமையான எழுத்துக்களிலிருந்து எடுத்துக்காட்டி, தேவதயவுக்காக காத்திருப்பதற்காக இயேசுவானவர் பரலோகத்திற்கு ஏறிப்போகும் காலமும் காலத்தின் முடிவும் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை அவன் புரிந்து கொண்டான்.

*''இந்த இயேசுவை தேவன் எழுப்பினார். இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம். அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத் தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார். தாவீது பரலோகத்திற்கு எழுந்து போகவில்லையே, ஆனால், "கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி : நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதப்படியாக்கிப் போடும் வரைக்கும், நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும் என்றார்' (சங்கீதம் 110) என்று அவனே சொல்லியிருக்கிறான். ஆகையினால் நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக் கடவர்கள்"* (அப்போஸ்தலர் 2:32-36).

மனிதனுக்காக தியாகபலியாய் மரித்து, அதைத் தொடர்ந்த அவரது உயிர்த்தெழுதலிலிருந்து இயேசு இப்போது வகிக்கும் பதவி அதுதான். 'அழியாத ஜீவனுக்குரிய வல்லமையைப் பெற்றவராக இப்போது இருப்பதால் (எபிரெயர் 7:16) அவரை நேசிக்கிறவர்களுக்கும் அவருக்குச் சேவை செய்கிறவர்களுக்கும் உதவி செய்ய இயேசு வல்லவராயிருக்கிறார். அவரது ஊழியத்தில் காண்பிக்கப்பட்டபடியே அத்தகைய மக்கள்மீது அவர் உண்மையும் நம்நிலை குறித்து முழு மன உருக்கமும் உடையவராய் இருக்கிறார். இந்த மனிதரைப் போல ஒருவரும் ஒருபோதும் சொல்லி இருக்கமுடியாது. ஏனென்றால் ஒரு முறை அவர் இப்படிச் சொன்னார் :

*"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்"* (மத்தேயு 11:28-30)

### நித்திய ஜீவனைத் தருபவர்

இயேசுவுக்குள் இருக்கும் விசுவாசிகள் அவர் திரும்பிவரும்போது அழியாமையைப் பெறுவார்கள் என்றும், சிலர் அந்த நித்திய பெற்றுக் கொள்ளுவார்கள் என்றும், வாழ்வை அவர்கள் அவரது வருகைக்குமுன்பே மரித்திருந்தால், நித்திய ஜீவனை அடைவதற்கு உயிர்த்தெழுவார்கள் எனவும் அவர்கள் நம்புகிறார்கள். (தானியேல் 12:2) அவர்கள் இன்னும் உயிரோடிருப்பார்களானால் இயேசுவைப் போல் மாற்றப்படுவார்கள். (1 கொரிந்தியர் 15:50-53) இயேசுவை ராஜா என்று இந்த நிபந்தனைகளின்படி அழைக்கக்கூடியவர்களின் மத்தியில் அவர்கள் காணப்படுவார்கள்:

*''தேவரீர்..... பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதிய பாட்டைப் பாடினார்கள்"* (வெளிப்படுத்தல் 5:9,10).

இராஜாவாகிய இயேசு கிறிஸ்துவோடு என்றென்றும் வாழ்கிறவர்களாகவும் முழு உலகின் மீதும் தவறில்லாமல் அரசாளுகிறவர்களாகவும் மாறவேண்டும் என்பதுதான் உண்மையான எல்லா விசுவாசிகளின் வருங்கால நோக்கமாக இருக்கிறது!

## வரவிருக்கும் தேவ ராஜ்யம்

பூமியின் மீது ராஜாவாக ஆளுகை செய்ய வரும் கர்த்தர் இயேசுவின் வருகையைத் தொடரும் ஆசீர்வாதங்களில் சிலவற்றை மட்டும் நாம் சிறப்பிட்டு சித்தரிக்க முடியும். அது ஓர் ஆயிரம் ஆண்டுகள் எடுக்கும், அக்காலக்கட்டத்தில் தான் பூமியானது எப்படி இருக்கவேண்டும் என்று தேவன் எப்படி விரும்பிக் கொண்டிருந்தாரோ அதுபோல மாறும். உரிய மதிப்பை வழங்கும் இடமாகத் திகழும்.



## சர்வதேச அரசாட்சி

*"ஒரு சமுத்திரந் தொடங்கி மறு சமுத்திரம் வரைக்கும், நதி தொடங்கி பூமியின் எல்லைகள் வரைக்கும் அவர் அரசாளுவார்.... சகல ராஜாக்களும் அவரைப் பணிந்து கொள்வார்கள். சகல ஜாதிகளும் அவரைச் சேவிப்பார்கள்"* (சங்கீதம் 72:8,11).

## சீர்த்திருத்தம்

*"உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும்போது பூச்சக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்"* (ஏசாயா 26:9).

## பொல்லாதவர்கள் பதுங்குவதற்கான இடம் இருக்காது

*"பொல்லாதவர்கள் அறுப்புண்டு போவார்கள்; கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். இன்னுங் கொஞ்ச நேரந்தான், அப்போது துன்மார்க்கன் இரான்; அவன் ஸ்தானத்தை உற்றுவிசாரித்தாயானால் அவன் இல்லை"* (சங்கீதம் 37:9,10).

## நீதியான அரசாட்சி

*"அவர் உம்முடைய ஜனங்களை நீதியோடும், உம்முடைய ஏழைகளை நியாயத்தோடும் விசாரிப்பார். ஜனத்தில் சிறுமைப்படுகிறவர்களை அவர் நியாயம் விசாரித்து, ஏழையின் பிள்ளைகளை இரட்சித்து, இடுக்கண் செய்கிறவனை நொறுக்குவார்"* (சங்கீதம் 72:2,4).

## யுத்தங்கள் முடிவடையும்

*"அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்து கொள்வார். அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண் வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள். ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை. இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை"* (ஏசாயா 2:4).

## கூடுதலான வளமும் செழுமையான பலனும்

*"பூமியிலே மலைகளின் உச்சிகளில் ஒரு பிடி தானியம் விதைக்கப்பட்டிருக்கும்.*



*அதின் விளைவு லீபனோனைப் போல அசையும். பூமியின் புல்லைப்போல நகரத்தார் செழித்தோங்குவார்கள்"* (சங்கீதம் 72:16).

## தெய்வீக ஆசிரியர்கள்

*"நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும் போதும், வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்"* (ஏசாயா 30:21).

## நீடிய வாழ்வு

*"அவர்கள் கட்டுகிறதும், வேறொருவர் குடியிருக்கிறதும், அவர்கள் நாட்டுகிறதும், வேறொருவர் கனி புசிக்கிறதுமாயிருப்பதில்லை. ஏனெனில் விருட்சத்தின் நாட்களைப்போல என் ஜனத்தின் நாட்களிருக்கும். நான் தெரிந்து கொண்டவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளை நெடுநாளாய் அனுபவிப்பார்கள்'* (ஏசாயா 65:22).

## மொழியிலும் மதத்திலும் மக்கள் ஒற்றுமை

*"அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஒரு மனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்"* (செப்பனியா 3:9).

## ஆயிரவருட அரசாட்சி உலகத்தின் சீர்த்திருத்த காலம்

*"நான் சிங்காசனங்களைக் கண்டேன். அவைகளின் மேல் உட்கார்ந்தார்கள். நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இயேசுவைப் பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக் கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்து கிறிஸ்துவுடனே கூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்"* (வெளி. 20:4).

## உயிர்த்தெழுதலும் பலனும்

*"மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன். அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன. ஜீவ புஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது. அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்"* (வெளிப்படுத்தல் 20:12).

விளைவு - பூமியின் குடியிருக்கும் அனைவரும் என்றென்றும் அழியாதவர்களாயிருப்பார்கள்.

*"அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார். இனி மரணமுமில்லை. துக்கமுமில்லை. அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது"* (வெளிப்படுத்தல் 21:4)

## மீட்கப்பட்டவர்களுக்கு களைப்படையாத வலிமை

*"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்"* (ஏசாயா 40:31).

## நிறைவேறுதல்

*"என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை. கேடுசெய்வாருமில்லை. சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்"* (ஏசாயா 11:9).

*"அப்பொழுது கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே*

கர்த்தர் இருப்பார். அவருடைய நாமம் ஒன்றாயிருக்கும்" (சகரியா 14:9).

"பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கும் என்று என்னுடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்" (எண்ணாகமம் 14:21).

வருகின்ற மறுரூபமாகுதலை கருத்தில் கொண்டவர்களாய் வேதாகமத்தினுடைய சந்தோஷத்தை உண்டாக்கும் தேவ ராஜ்யத்தின் நற்செய்தியை விசுவாசிப்பவர்கள், இயேசு மறுபடியும் வருவதற்காக வாஞ்சித்து அவரது வருகையின் அடையாளங்களுக்காக ஆர்வமுடன் காத்திருப்பவர்களைக் கண்டு ஆச்சரியப்படுவீர்களா? இயேசுவுக்காக விழிப்புடனும் காத்துக் கொண்டு வருகின்ற யுகத்திற்காக ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறீர்களா?

- டெரிக் பான்யார்டு

## கொதி கெண்டியைத் துலக்கும் போது

என் கெதிகொண்டியை அல்லது டீ, காப்பி போடும் பாத்திரத்தை வழக்கமாகத் துலக்குவதைவிட அதிக கவனம் செலுத்தித் துலக்கிக் கொண்டிருந்தேன். அப்பொழுது என்னில் ஒரு எண்ணம் எழுந்தது. நான் ஏன் இவ்வளவு சிரமப்பட வேண்டும்? யாரும் வந்து பாராட்டப் போகிற தில்லையே.

என் நினைவிற்குள் ஒரு உண்மை எழும்பியது. இப்பொழுது நான் பாத்திரத்தைப் பளபளவெனத் துலக்கிவிட்டால் விருந்தினர் வருகையை எதிர்ப்பார்த்திருக்கும்போது, திரும்பத் துலக்கவேண்டாமே. மேலும் இப்பொழுது கவனிக்காமல் விட்டுவிட்டால், பயன்படுத்தவே முடியாதபடி அழுக்காகிவிடலாம் அல்லது அதன் முதல் பளபளப்புக்குக் கொண்டுவர வெகுநேரம் ஆகும்.



நம் வாழ்க்கையில் சத்தியத்தைக் கடைப்பிடிப்பதிலும் இதுதானே உண்மை. கொஞ்சம் வழி விலகிப் போகும் நாம் : "இது எளிதானது. இதனால் யாருக்கும் தீங்கு விளைவிக்கவில்லை", என நினைக்கிறோம். ஆகவே இன்னும் கொஞ்சம் வழிவிலகுகிறோம். கடைசியில் நாம் ஒளிர்வது இல்லை என்றாகிப் போகிறது. முதலில் வெளிச்சமாயிருந்த வாழ்க்கைக்குத் திரும்பி வரமுடியாமலே போய் விடுகிறது.

இரக்கமுள்ள நம் தேவனுக்கு நன்றி செலுத்துவோம். அவர் ஒருபோதும் நம்மைக் குறித்து நம்பிக்கையிழந்து நம்மை விட்டுவிடுகிறதில்லை. ஆகவே நாம் உண்மையாகவே நம் விசுவாசத்தில் பிரகாசிக்க விரும்பி, அவரின் மன்னிப்பைப் பெறுவோமானால், நாமும் கெட்ட பழக்கங்கள் நீங்கி நம் வாழ்க்கையைச் சுத்திகரித்து மிளிரச் செய்வோம்.

ஆம், என் கொதி கெண்டி எனும் டீ, காப்பி, போடும் பாத்திரம் போல, நம் வாழ்க்கைப் பாதையில் செல்லச்செல்ல தொடர்ந்து சுத்திகரிக்கப்படுவோம். யாருக்குத் தெரியும்? நம் திடீர் விருந்தாளி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவாகவே இருக்கலாமல்லவா?

- ஒரு சகோதரி



# விவாகரத்து பற்றிய கிறிஸ்தவ போதனை

''விவாகம் பண்ணிக்கொண்டவர்களுக்கு நானல்ல, கர்த்தரே கட்டளையிடுகிறதாவது. மனைவியானவள் தன் புருஷனை விட்டுப் பிரிந்து போகக்கூடாது. பிரிந்து போனால், அவள் விவாகமில்லாதிருக்கக்கடவள்; அல்லது புருஷனோடே ஒப்புரவாகக் கடவள். புருஷனும் மனைவியைத் தள்ளிவிடக்கூடாது" (1. கொரிந்தியர் 7:10-11)

கிறிஸ்துவுக்குள் சகோதர சகோதரிகள் மத்தியில் விவாகரத்து என்பது கிறிஸ்துவின் கட்டளைகளுக்கு முரணானது. விசுவாசியொருவன் விவாகரத்து செய்தால், ஒப்புரவாகுதலுக்கு வாய்ப்பு இருக்கும்வரை மறுமணத்திற்கு இடைமே இல்லை.

"ஆதாமுக்கோ ஏற்ற துணை இன்னும் காணப்படவில்லை. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார். அவன் நித்திரையடைந்தான். அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார். அப்பொழுது ஆதாம். இவள் என் எலும்பில் எலும்பும், மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள். இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் ஏன்றான், இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணிகளாயிருந்தும் வெட்கபடாதிருந்தாள்கள்." (ஆதியாகமம் 2:20-25).

''பரிசேயர் அவரைச் சோதிக்க வேண்டுமென்று அவரிடத்தில் வந்து. புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாகிலும் தள்ளிவிடுவது நியாயமா என்று கேட்டார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக, ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும் நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்க, அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்" (மத்தேயு 19:3-6).




ஆணும் பெண்ணும் வாழ்க்கை முழுவதும் இணைந்திருக்கும்படியாக இணைக்கப்படுவதே தேவனுடைய நோக்கம் என்பது தெளிவாகிறது. இருவரில் ஒருவரது மரணம் தான் இந்தப் பிணைப்பை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும். இதற்குப் பல்வேறு காரணங்களைக் கண்டுபிடிப்பது வெகுளளிது.

ஏவாள் உருவாக்கப்பட்டவிதமே (“என் எலும்பில் எலும்பும் மாம்சத்தில் மாம்சமும்”) இந்த பந்தம் உடைக்க முடியாதது. மனிதனின் மனது மற்றும் சன்மார்க்க குணங்கள் இந்த இணைப்பு வேண்டுமென்கிறது. மேலும் இனம் விருத்தியாகி வளர்க்கப்படவேண்டும் என்ற திருமண நோக்கம் இருவரும் இணைந்திருக்கவேண்டும் என எதிர்பார்க்கிறது.

எப்பொழுதெல்லாம் எங்கெல்லாம் வாழ்க்கைத்துணை கசப்பும் பகையும் உள்ளதாகி, கணவன் மனைவிக்கிடையே பிரிந்து போதல் நிகழ்கிறதோ, இத்தகைய நடவடிக்கைகள் வேதாகமம் நம்முன் வைக்கும் உயர்வான நடத்தையின் அளவுகளுக்கு ஒத்துவராதவைகளாயுள்ளன. எங்கு கணவன் மனைவிக்கிடையே கசப்பும் பகைமையும் நிகழ்கிறதோ, அங்கே கிறிஸ்தவக் கடமையானது எப்போதும் போல பழைய உறவைப் புதுப்பிக்க நாடவேண்டும்.

இது கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் மட்டுமுள்ள கடமை அல்ல. பொறுமையாய் விளங்கிக் கொண்டு ஞானமாய் அறிவுரை வழங்குவோரின் கடமையுமாகும். எங்கு கசப்புக்கும் பகைமைக்கும் அடுத்து பிரிவு ஏற்கனவே நிகழ்ந்து விட்டதோ, மறுபடியும் இணைக்கப்படுவதற்கான சாத்தியக்கூறு இருக்குமாயின் விவாகரத்தை நாடுவதும் திரும்ப விவாகம் செய்து கொள்வதும் கர்த்தரின் போதனையை மறுப்பதாகும். ஏனெனில் இத்தகைய ‘தீர்வில்’ ஒப்புரவாகும் சாத்தியக்கூறுக்கு இடமே இல்லை. பிள்ளைகள் இருக்கும் குடும்பத்திலும் விவாகரத்து கூடாது.

*“தன் மனைவியைத் தள்ளிவிடுகிற எவனும், தள்ளுதற்சீட்டை அவளுக்குக் கொடுக்கக்கடவன் என்று உரைக்கப்பட்டது. நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். வேசித்தனமுகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன் அவளை விபசாரம் செய்யப் பண்ணுகிறவனாயிருப்பான். அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்”* (மத்தேயு 5:31,32).

*“அப்படியானால் தள்ளுதற்சீட்டைக் கொடுத்து, அவளை தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டார் என்றார்கள். அதற்கு அவர் உங்கள் மனைவிகளைத் தள்ளி விடலாமென்று உங்கள் இருதயக்கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்”* (மத்தேயு 19:7-9).

இயேசு அனுமதித்த காரணம் தவிர வேறெ காரணத்திற்காக சகோதரனோ சகோதரியோ வாங்கும் விவாகரத்து பாவம் தான். அதை சும்மா விட்டு விடமுடியாது. அதே சமயம் மெய்யாய் மனந்திரும்புவதற்கான வாய்ப்பை சபை மறுக்கக் கூடாது.

விவாகரத்து செய்தவரைத் திருமணம் அல்லது மறுமணம் செய்து கொள்வது கிறிஸ்து கூறிய உன்னத அளவுகளுக்கு முரணானது என்றாலும், எக்லிஷியா (சபை) எல்லாருக்கும் ஒரே மாதிரி விதியைப் பயன்படுத்தாமல் இருக்கலாம்.

உயர்ந்த தெய்வீக அளவில் இல்லாதவர்களுக்கு புத்தி சொல்லிக் கடிந்து கொள்வது நம் நோக்கமாயிருக்கவேண்டும். கிறிஸ்துவின் உயர்ந்த உன்னத அளவுகளை முழுமையாகக் காத்துக்கொள்ள முயலும்போது, அந்த அளவுகளை மீறினவர்களைக் குறித்த மனப்பான்மையில் தவறிழைக்காதபடி விழிப்புடன் இருக்கவேண்டும். ஆண்டவர் அவர்களை நியாயந்தீர்ப்பார். இக்காரியங்களில் சரியான சீர்நிலையில் கர்த்தருடைய போதனையின் அடிப்படையில் ஜீவிக்க ஜெபத்துடன் கூடிய தொடர்ந்து செய்யும் முயற்சியும் தாழ்மையுள்ள சிந்தனையும் வேண்டும்.





# பாபிலோன் தேசத்து பெல்ஷாத்சார்

பாபிலோனின் அரசனாகிய பெல்ஷாத்சார் ஒரு விருந்து வைத்தான். எருசலேமிலிருந்த யாஹ்வேயின் தேவாலயத்திலிருந்து கொண்டு வந்த பாத்திரங்களில் குடித்து, புறஜாதி தேவர்களைப் புகழ்ந்தான். அப்பொழுது ஒரு மனிதக் கையுறுப்புதோன்றி, சுவரில் அவனுடைய ராஜ்யம் தராசிலே நிறுக்கப்பட்டு, முடிவுக்கு வரப்போகிறது என எழுதியது. இந்தச் சம்பவம் தானியேல் 5ம் அதிகாரத்தில் எழுதப்பட்டுள்ளது.



“குறைகூறும் மேதாவிகள்'' என்றறியப்பட்ட டீன்பரர் (1831-1903) போன்ற அறிஞர்கள் பெல்ஷாத்சார் பற்றிக் கூறப்பட்டத்தைக் கதை என்று பரிகாசம் செய்தனர். “பெல்ஷாத்சார் என்று ஒரு அரசனே கிடையாது'' என்று பரர் அறிவித்தான். பேராசிரியர் சேய்ஸ் என்னும் இன்னொரு குறை கண்பவன் “சுவரில் எழுதப்பட்டது குறித்து தானியேல் வேறுபட்டுக் கூறுகிறார்" என்றான். மெத்தப் படித்தவர்களிடம் பரிசுத்த வேதம் குறித்த அவர்களின் குருட்டுத்தனமான பகை உணர்ச்சி இப்படி இருக்கிறது. எழுதப்பட்டது வேதத்தில் சொல்லப் பட்டதைக் காட்டிலும் வேறுவிதமாய் இருந்தால் வேதம் தவறு எனலாம் !



தானியேல் தீர்க்கதரிசிக்கு விரோதமான குற்றச்சாட்டு முட்டாள்தனமான யூகங்கள் எனக் காட்டப்பட்டுள்ளன. வேதத்தில் கூறப்பட்டுள்ள பெல்ஷாத்சாரின் தந்தை நோனிடஸ் இரண்டு உருளைகளில் பொறித்து வைத்துள்ள எழுத்துகள் பற்றிக் கண்டெடுக்கப்பட்ட தகடு ஒன்று கூறுகிறது. ஒரு உருளை 1854ல் சர் ஹென்றி ராலின்சன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டு 1856ல் மொழிபெயர்க்கப்பட்டது. 1880ல் முதன் முதலாக வெளியிடப்பட்டது. அதிலுள்ள வாசகம் பின்வருமாறு:



“பாபிலோனின் ராஜாவாகிய நபோனிடஸ் ஆகிய நான் என்னை உன்னதமான தேவனாகிய விரோதமாகப் பாவம் செய்வதிலிருந்து காத்துக் கொள்ளும். கிருபையாய் எனக்கு நீண்ட ஆயுளைத் தாரும். பெல்ஷாத்சாராகிய என்மகனுக்கு என் முதல் மகனுக்கு, என் இடுப்பிலிருந்து பிறந்தவன் உள்ளத்தில் உன்னதமான தேவனைக் குறித்த பயத்தை வையும். அப்படி நீர் செய்தால், அவனும் பாவமே செய்ய மாட்டான். அவன் பாவம் செய்யாமலிருப்பதற்கும் வாழ்க்கையின் எதிர்காலத்தில் திருப்தியாயிருப்பதற்கும் உதவியருளும்"



இன்று இந்த உருளைகள் இங்கிலாந்தில் லண்டனிலுள்ள பிரிட்டீஷ் அருங் காட்சியகத்தில் உள்ளன. மனிதனின் அறிவீனத்திற்கும் வேதவாக்கியங்கள் சற்றும் தவறிழைக்காமல் இருக்கும் நிலைக்கும் அவை சாட்சி கூறுகின்றன. சமீபத்தில் பாபிலோனின் புறநகர் பகுதியில் மண்பூஜாடிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவைகளுடன் நிறைய தட்டுகள் காணப்பட்டன. அந்தத் தட்டுகள் பெல்ஷாத்சாரின் அலுவலர்களையம் அரண்மனைப் பணியாளர்களையும் இனம் காட்டின.

**ஆம், பெல்ஷாத்சார் வாழ்ந்தான்.**

# காணாமற்போன மகன்

*“உன் சகோதரனாகிய இவனோ மரித்தான், திரும்பவும் உயிர்த்தான். காணாமற் போனான், திரும்பவும் காணப்பட்டான்”* (லூக்கா 15:32).

பரிசேயர்களும் வேதபாரகர்களும் ‘‘இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடே சாப்பிடுகிறார்” என்று முறுமுறுத்தபொழுது இயேசு அவர்களுக்குப் பதில் அளிப்பதாகக் கூறிய மூன்று உவமைகளில் “காணாமற்போன மகன்” பற்றிய உவமை கடைசியானதாகும். இயேசு கிறிஸ்துவின் செயல்களின் எதிர்மாறான தோற்றத்தைத்தான் இஸ்ரவேலின் மூப்பர்கள் பார்த்தார்கள். வரிவசூலிப்பவர்களும் பல்வேறு விதமான பாவிகளும் பழகவும் தொடர்பு கொள்ளவும் ஏற்றவர்கள் அல்ல என எண்ணினார்கள். தாங்கள் தீட்டுப்படக்கூடாது என்பதில் மட்டுமே அவர்கள் கருத்தாயிருந்தார்கள். கெட்டுப்போன பாவிகளைத் தேடி, அவர்கள் மீண்டும் மந்தையில் சேர்வதற்கான வழியைக் கண்டுபிடிக்க உதவி செய்யவேண்டும் என்ற பொறுப்பு தங்களுக்கு இருக்கிறதை அவர்கள் உணரவே இல்லை.



வேடிக்கை என்னவெனில், பாரம்பரியக் கிறிஸ்தவர்களின் பார்வை இந்தக்கதையின் எதிர்மறை கருத்தையும் முக்கியப் படுத்துகிறது. ஆங்கில வேதாகமம் ஒன்று இந்த உவமையைக் கெட்டகுமாரனின் உவமை என்கிறது. இன்னொன்று “காணாமற்” போன மகனின் உவமை என்கிறது. ஆனால் இந்தக் கதையின் அழுத்தமான வார்த்தையைக் கதையின்முடிவில் ‘‘காணப்பட்டான்’’ அல்லது “கண்டுபிடிக்கப்பட்டான்” என்று கூறுகிறது. (லூக் 15:32) ஆகவே *“கண்டுபிடிக்கப்பட்ட மகன்”* அல்லது *“காணப்பட்ட மகன்”* என்ற தலைப்பையே நாம் தெரிந்துக்கொள்ள வேண்டும். லூக்கா 15ல் உள்ள 3 உவமைகளிலும் அழுத்தமாகக் கூறுப்படும் கருத்து.

யாதெனில், ‘‘மீட்பு’’, இழப்பு அல்ல. காணாமற்போன ஆடு, காசுகள் அல்லது மகன்களைத் தேடி, கண்டுபிடித்து, மீட்டுவருவதற்கு நம்மை வழிநடத்தும், வல்லமையான பாடங்கள் இயேசு கிறிஸ்துவினால் இந்த உவமைகளைக் கொண்டு போதிக்கப் படுகின்றன.



## நம்மைச் சம்பந்தப்படுத்தலாம்

நம் உணர்வுகளைப் பலமாய்ப் பாதிக்கும் கதையாக ‘‘கண்டுபிடிக்கப்பட்ட மகன்’’ கதை உள்ளது. நம்மில் யாராவது ஒருவர் தனது பிள்ளை, வாழ்க்கைத்துணை, உறவினர் அல்லது நண்பர் சுவிசேஷ செய்திக்கு இடங்கொடாமல் கெட்டுப்போயிருந்தால், இத்தகைய சூழ்நிலை தரும் துக்ககரமான வேதனையை உணர்ந்து கொள்ளலாம். ரபிகள் எழுதினவைகளிலும் இதைப்போன்ற ஒரு “கெட்டகுமாரன்” கதை இருக்கிறது.



அவனும் துன்மார்க்கமாய் வாழ்ந்து தன் ஆஸ்தியை அழித்துப் போட்டான். ஆனால் இந்த யூத உவமையின் முடிவும், விளைவும் அதனின்று வேறுப்பட்டது.

## தான் விரும்பியதை மகன் பெற்றான்

ஒரு மனிதனுக்கு இரண்டு மகன்கள் இருந்தார்கள். இளைய மகன் தனக்குச் சேர வேண்டிய சொத்தை உடனடியாகப் பிரித்துத் தரும்படி கேட்டான். இளைய மகனாக, அவனுக்கு சொத்தில் மூன்றில் ஒரு பங்கு தான் கிடைக்கும். மூத்த மகன் நியாய விதிப்படி (உபாகமம் 21:17) இரு மடங்கு ஆஸ்தியைப் பெற உரிமை பெற்றவன்.

இளைய மகனின் செயல்களுக்கு அவனே தான் பொறுப்பு அவன் என்ன விரும்பினானோ அதைப் பெற்றுக் கொண்டான். அப்படி அவன் பெற்றுக் கொண்டது. அவனை ஏறத்தாழ மரணம் வரை கொண்டுபோய்விட்டது.

## முன்னறியக்கூடிய அழிவு

இளைய மகனின் வீழ்ச்சி முன்னறியக்கூடியதே. அவன்தன் தகப்பன் வீட்டை விட்டுப் போய்விட்டான். தகப்பனின் ஒழுங்கின் கீழ் இனியும் இருக்க விரும்பாமல் இருந்திருக்கலாம். மேலும் அவன் *“தூர தேசத்திற்குச்”* சென்றான். அங்கே தன் தகப்பனின் கட்டுப்பாடு தன்மேல் இராது என எண்ணினான். தனக்குண்டான யாவையும் செலவழித்துப் போட்டான். எதிர்காலத்திற்காக எதையும் வைக்காததால், உண்மையாகவே அவனுக்குத் தேவை ஏற்பட்டது.

இந்த கதை நம் காலத்திற்கும் ஏற்றதாகவே உள்ளது. எளிதில் கடன் கிடைக்கும் (கிரெடிட்கார்டுகள்) அதோடு கூட இன்றைய உலகம் மேலும் மேலும் பொருட்களைச் சேர்க்கும் ஆசைகளைத் தூண்டிவிடுகிறது. ஆகவே இவ்வுலகம் ஒன்றுமே செய்யமுடியாத நிர்க்கதியான நிலைக்குள் மனிதனைக் கொண்டு வந்து விடுகிறது. நம் திராணிக்கு மிஞ்சி செலவழிப்பதும் பின்னர் பயங்கரமான கஷ்டத்தில் அகப்பட்டுக் கொள்வதும் மிகமிகஎளிது. சில சமயங்களில் இந்தக் கஷ்டம் நேரடியாகவே வெளிப்படுகிறது. ஆனால் அநேக சமயங்களில், ஒரு சகோதரன் அல்லது சகோதரி தன் நேரம் மற்றும் சக்தியை தன் வேலையில் (சில சமயங்களில் இன்னொரு வேலையிலும்) செலவழித்து, ஏராளமான கடன் தொகைகளைக் கட்ட சமாளிக்கிறார். ஆனால் ஆண்டவருடைய ஊழியம் புறக்கணிக்கப்படுகிறது. பணத்திற்காக நாம் எவ்வளவோ தியாகம் செய்கிறோம். ஆனால் சத்தியத்திற்காக தியாகம் செய்வதில்லை.

இந்த இளைஞன் எந்த அளவிற்குத் தாழ்ந்தான் என்றால், அவன் அந்த தேசத்துக் குடிமகன் ஒருவனோடு போய் ஒட்டிக்கொண்டான். வேறு வார்த்தையில் சொல்லவேண்டுமானால், வேறு மதத்தவன் அவன் எஜமானன் ஆனான். ஒரு யூதனுக்கு மிகவும் கீழ்த்தரமான வேலையாகிய பன்றிகளை மேய்க்கும் வேலையைச் செய்தான்.

மிதமிஞ்சிய பொருட்களை வாங்கிய கடனை அடைக்க நாம் படும்பாடு நம்மை எந்த நிலைக்குக் கொண்டு போய் விடுகிறது. பாருங்கள்.

## உணர்தலும் மனந்திரும்புதலும்

இந்தச் சமயத்தில் தான் குறிப்பிடத்தக்க ஒன்று நிகழ்கிறது. இளைஞன் விழித்தெழுந்து தன் பாவத்தைக் குறித்து உணர்வடைகிறான். சில சமயங்களில் நம் தோல்விகளின் பயங்கரத்தை அறிய அடிமட்டத்திற்கே நாம் செல்ல வேண்டியிருக்கிறது. மனித குணாதிசயத்தின் ஒரு அடையாளம் இது. இந்தப் பாடம் இவ்வளவு வேதனை தருவதாயிருந்தாலும், சில சமயங்களில், ஒருவர் தன் வாழ்க்கையை அழித்துக்கொள்ளும் பாதையில் செல்ல முனையும் போது, நாம் பேசாமல் பார்த்துக்கொண்டு தான் இருக்க முடியும். நாம் கொடுக்கும் எச்சரிப்புகளெல்லாம் எடுபடாமல் போகின்றன. ஆனால் நாம் விட்டுவிடக்கூடாது. அவன் வாழ்க்கையில் ஏதாவது ஒரு தருணத்தில், அவன் ஆயத்தமாயிருந்தால்

மட்டுமே, நாம் சொல்வதைக் கேட்பான்.

இளைஞன் தன் பாவம் இன்னதென்று விளங்கிக் கொள்ளுகிறான். *"நான் பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்"* எப்படியும் எல்லா பாவமுமே கர்த்தராகிய தேவனுக்கு விரோதமானது தான். (ஆதியாகமம் 39:9; சங்கீதம். 51:4)

இந்த அடிப்படை சத்தியத்தைப் போதிக்கும் வகையில், இளைஞன் தேவனுடைய மன்னிப்பை நாடவேண்டுமெனவும், சரீரப்பிரகாரமான தந்தையின் இரக்கத்திற்காகத் தாழ விழவேண்டுமென்றும் தன் நினைவுகளில் நினைக்கும்படி செய்கிறார். அதுவே சரியான வரிசை. முதலில் தேவனிடம் நம் பாவத்தை ஒத்துக்கொள்ளவேண்டும். பின்னர் மனிதனிடம் அது சம்பந்தமாக செயல்பட வேண்டும்.

*"இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும்"*, என்று இளைஞன் கூறுகிறான் (லூக்கா 15:19). இதைச் சொல்லுவதில், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, ஒரு பாரம்பரியக் கதைக்குள் பரிசேயர், வேதபாரகரைக் கொண்டு வருகிறார். அந்தக் கதை நீதிபோதனை என்னவென்றால் "ஒரு நண்பனின் 'கீழ்ப்படியாத' மகன் அடிமைத்தனத்திலிருந்து மகனாக அல்ல, கீழ்ப்படிதலை அவனிடமிருந்து கட்டாயப்படுத்தி பெறும் படியாக, அடிமையாக மீட்கப்படுகிறான்." இயேசு கதைக்கு முற்றிலும் வித்தியாசமான முடிவைத் தருகிறார்.

## தந்தையின் மன்னிப்பு

இளைஞன் தன் தகப்பனிடம் வருகிறான். *"அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டான்"* (லூக்கா 15:20). இது எவ்வாறு சாத்தியமாகும்? இங்கு மொழி பெயர்ப்பு சரியாகவே இருக்கிறது. மூல கிரேக்க வார்த்தை "வெகுதூரத்தில்" என்ற பொருள் தருகிறது. அவனுடைய தகப்பன் தினந்தோறும் ஒரு உயரமான இடத்திற்குப் போய் நின்று கொண்டு, கண் எட்டும் தூரம் வரை தன் மகன் போன 'தூர தேசத்தின்' திசையில் பார்த்துக்கொண்டு ஏதோ ஓர் நாளில் மகனைப் பார்க்கமுடியும் என்ற நம்பிக்கையுடன் ஜெபித்துக் கொண்டிருப்பவர் என நாம் கற்பனை செய்யமுடியும்.

அவனைப் பார்த்தாரோ, இல்லையோ - தந்தை மகனுக்காகக் காத்துக்கொண்டிருந்தாரா? இல்லை. அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவனை முத்தஞ் செய்தான், என்றிருக்கிறது. முக்கியமான கருத்து என்னவெனில், தகப்பன் தன் மகனை முற்றுமுடிய முழுவதுமாக வரவேற்று ஏற்றுக் கொண்டான்.

## மறுவாழ்வும் கொண்டாட்டமும்

தான் கண்ட மகனை, தகப்பன் வரவேற்றது மட்டுமல்ல, குடும்பத்தில் அவனுக்கு மரியாதையையும் மீட்டுக் கொடுத்தார். முதல் நூற்றாண்டில் வியாபாரம் போன்ற காரியங்களில் பத்திரங்களில் முத்திரை பதிக்க மோதிரத்தைப் பயன்படுத்தியது போல அவன் விரலில் மோதிரம் அணிவித்தார். இது குறிப்பிடத்தக்கது.

சுவாரஸ்யமான விஷயம் என்ன வென்றால், தேவன் நம் பாவங்களை மன்னிப்பது மட்டுமல்ல, அவைகளை முற்றிலும் மறந்து விடுகிறார். அப்போஸ்தலர் 3:20 பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படுவதைக் கூறுகிறது. நாம் அதே போல் செய்கிறோமா? எந்த ஒரு உறவிலும் ஞானமாகப் பின்பற்ற வேண்டிய முறை இது. பாவியைப் பொறுத்த மட்டில் மனந்திரும்புதலும் மன்னிப்பும் சேர்ந்து வருவது போல, தீங்கு இழைக்கப்பட்டவரும் மறந்துவிடாவிட்டால் பயனில்லை. தேவன் பாவத்தை மன்னிப்பது மட்டுமல்ல, அதன் நினைவையே துடைத்துப் போட்டு விடுவதாக சொல்கிறாரெனில், நாமும் அதையே செய்யவேண்டும்.



*"கொழுத்த கன்று"* (வ. 23, 27, 30) ஒரு விசேஷித்த விருந்துக்கு அடிக்கப்படுகிறது. 'கொழுத்த' என்றால் தானியம் நின்று வளர்ந்து என்று பொருள். 29ம் வசனத்தில் கன்றுக்குட்டி என்றிருக்கிறது. இந்த இளம் சின்ன விலங்கு மந்தையோடு சேர்ந்து ஓடவும், மேய்சல் காட்டில் அலைந்து திரியவும் அனுமதிக்கப்படவில்லை.

பொதுவாக ஒரு மகன் (அல்லது சகோதரன், சகோதரி) உலகில் அலைந்து திரிந்து கெட்டால், அவர்கள் தங்களைத் தகுதியற்றவர்கள் என்று நினைத்துக்கொள்வதால் தான் தாங்கள் நேசிக்கப்படுவதில்லை. பல்வேறு காரணங்களுக்காக விரும்பப்படுவதில்லை என்று நினைக்கிறார்கள். அவர்களுக்குத் தேவைப்படுவது யாதெனில் அவர்கள் விசேஷித்தவர்கள் என அவர்களை உணரச் செய்வது, அவர்கள் திரும்பி வருவதை எளிதாக்குவது, அதிலும் முக்கியமாக, இனி ஒருபோதும் வீட்டை விட்டுப் போக நினையாமலிருப்பது.

## மூத்த சகோதரன்

மூத்த சகோதரனைப்பற்றி என்ன? பொதுவாக அவனை மோசமானவன் எனவும், வேதபாரகர் பரிசேயருக்கு ஒரு உதாரணம் என்றும் கூறுவர் இக்கூற்று ஓரளவு தான் உண்மை. ஏனெனில் தந்தை அன்பாக விளக்கிக் கூறியதற்கு மூத்த சகோதரன் பதில் ஒன்றும் பேசவில்லை என்றால் தந்தை கூறியதை அவன் ஏற்றுக்கொண்டான் என்று யூகிக்க முடிகிறது.

வெளிப்படையான உண்மை என்னவென்றால் நம் இயேசு கிறிஸ்து, மனந்திரும்பிய இளைய குமாரனுக்குக் கொடுத்த விசேஷித்த வரவேற்பு மூலம் நமக்கு ஆவிக்குரிய பாடம் ஒன்றைப் போதிக்கிறார். நாமும் இதே கருத்துக்களைப் பயன்படுத்தவேண்டும் என எதிர்பார்க்கிறார். *"நீ எப்போதும் என்னோடிருக்கிறாய், எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது"* (15:32) இதை எப்படி நாம் விளக்க முடியும்?

இளைய குமாரன் மன்னிக்கப்பட்டதில் மூத்த குமாரனுக்கு இழப்பு ஒன்றுமில்லை. கெட்டுப்போன ஒரு நபர் மறுவாழ்வு பெறுவதால், எப்போதும் உத்தமமாய் இருப்பவர்கள் ஒன்றையும் இழப்பதில்லை. மூத்தகுமாரனுடைய பொறாமைக்கு அடிப்படைச் காரணம் தவறான, நோக்கங்கள் தாம், நீர் ஒருக்காலும் எனக்கு ஒரு ஆட்டுக்குட்டியையாவது கொடுக்கவில்லை. (15:29) அவனுடைய நண்பர்கள் அவன் தந்தையின் நண்பர்களல்லர். அவன் தந்தையின் கட்டளைகளை மீறியதே இல்லை. இதைத்தான் தன் தந்தை மேலுள்ள அன்பு மற்றும் மரியாதையினிமித்தம் செய்தானா அல்லது சுயநலமான நோக்கங்கள் காரணமா?

தந்தையின் நிலைத்து நிற்கும், நீடித்து நிற்கும் பொறுமையைக் காண்கிறோம். தன் மூத்த குமாரனின் தவறான நோக்கங்கள் தான் பொறாமைக்குக் காரணம் என்பதை அவர் அறிகிறார். இருப்பினும், அவனிடத்தில் கடினமாகப் பேசவே இல்லை. தகப்பன் அவனிடம் கெஞ்சுவதைப் பார்த்தால், அவர் ஜெயித்துவிட்டதாகவே நாம் எண்ணக் கூடும். *"நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்க வேண்டும்"* என்பதைக் கவனியுங்கள். (வ.32) மகிழ்ந்திருப்பதில் அவனும் பங்கு கொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகிறான். அவன் அதை மறுக்கவில்லை என நாம் யூகிக்கலாம்.

பரிசேயர் வேதபாரகரை மட்டும் நடந்து கொள்வதற்கான உவமை இதுவென்றால், இயேசு அதைச் செய்திருக்க முடியும். மாறாக முழுக்குடும்பமும் ஆரோக்கியமடைவதில் அவர்களும் பங்கு கொள்ளும்படி அவர்களைக் கேட்கிறார். லூக்கா 15ம் அதிகாரத்திலுள்ள மற்ற இரண்டு உவமைகளைப் போலவே இதுவும் மகிழ்ச்சியிலும் களிகூருதலிலும் நிறைவடைகிறது. *உன் சகோதரனாகிய இவனோ மரித்தான். திரும்பவும் உயிர்த்தான். காணாமற் போனான், திரும்பவும் காணப்பட்டான்.* கண்டுபிடிக்கப்பட்ட மகனின் உவமை இவ்வாறு நிறைவடைகிறது.